ஏறி, இறங்கினோம். அந்தப் பாதைகள், அங்கே கோயிலுக்கு மலை உச்சிக்குப் போகின்ற பாதை, மிகவும் கரடுமுரடாக இருந்தது. ஆகவே அதை செப்பனிடுவதற்கு அறநிலையத் துறை மூலமாக 'எஸ்டிமேட்' போடப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கின்றது என்று நான் அறிகின்றேன். மிக முக்கியமான திருக்கோயில் அந்தப் பகுதியை அங்கே பல்வேறு பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள—சுற்றுலா தலமாகவும் ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு ஒரு தங்கும் விடுதி அங்கே மலை அடிவாரத்திலே கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முடிக்கின்ற தருவாயிலே இருக்கிறது.

9–20 மணி

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை இப்படி கோவில்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், கல்விக் கண் திறப்பதற்காக அரூர் பகுதியிலே அறநிலையத் துறை மூலமாக ஒரு மகளிர் கல்லூரி உருவாக்கித்தர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அந்தப் பகுதிக்கு பயணம் சென்ற போது இந்தக் கோரிக்கை எழுப்பப்பட்டது. நம்முடைய கல்வி அமைச்சர், அறநிலையத் துறை மூலமாக புதியதாகத் தொடங்கப்படுகின்ற கல்லூரிகளுக்கு மானியம் தருவதிலே போதிய சலுகைகள் தருவதாக இருந்தால் அறநிலையத் துறை மூலமாக தர்மபுரி மாவட்டத்திலே ஒரு கல்லூரி தொடங்க ஏற்பாடு செய்யப்படும்.

திருவண்ணாமலை நகரில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டுதல்.

* 5105 திரு. கே. பிச்சாண்டி:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகரில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை நகரில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தங்கும் விடுதி கட்டும் திட்டம் தமிழ்நாடு சுற்றுலா துறையின் பரிசீலனையில் உள்ளது.

1990 மே 10]

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, திருவண்ணாமலை நகரம் தற்போது மாவட்டத்தின் தலைநகரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மிக உலக புகழ் பெற்ற பழம்பெரும் திருத்தலமான அருணாசலேஸ்வரர்கோவிலும் உலக புகழ் பெற்ற ரமணர் மகரிஷி ஆசிரமும், மகான் ஷேஷாத்ரி ஆசிரமும் அருகிலே சாத்தனூர் அணையும் உள்ளதால் அதிக அளவு வெளி நாட்டு பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்குவதற்கு சரியான உணவு விடுதி இல்லாமல் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே உடனடியாக சுற்றுலாத் துறை மூலம் அங்கே ஒரு விடுதி கட்ட ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: தலைவர் அவர்களே சுற்றுலாத்துறை மூலமாக அங்கே ஒரு தங்கும் விடுதி கட்டுவதற்கு கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது. இடம் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே இரண்டு இடங்களை அங்கே நம்முடைய சுற்றுலாத் துறையினுடைய இயக்குநர் பார்த்து இருக்கின்ற ஒரு இடம் ஆலயத்திலிருந்து, திருக்கோவிலிருந்து 4 கி.மீ. தொலைவிலேயும், அதேபோல ரமண மகரிஷி ஆசிரமத்திலேயிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலும் இரண்டு ஏக்கர் நிலம், நல்ல இடமாக இருக்கின்றது. அதை தேர்வு செய்திருக்கின்றோம். ஆகவே அந்த இடம் சுற்றுலாத் துறைக்கு மாற்றம் செய்து கொடுத்தப்பிறகு அங்கே தங்கும் விடுதி கட்டப்படும்.

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியின் மூலம் $1\frac{1}{2}$ ஏக்கர் நிலம் வாங்குவதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு சுற்றுலாத் துறைக்கு அனுப்பப்பட்டது. அந்த சுற்றுலா விடுதி கட்டுவதற்குரிய திட்ட மதிப்பீடு எவ்வளவு? இந்த ஆண்டிலேயே அந்த விடுதி கட்டி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, நகராட்சி மூலமாக, நகராட்சியும் அப்படிப்பட்ட ஒரு இடத்தை தருவதற்கு முன்வருமானால் நாங்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறோம். அந்த இடம் ஏற்கெனவே பார்க்கின்ற இடத்தைவிட அருகில் இருக்கக்கூடிய இடமாக இருந்தால் அதை தேர்வு செய்யலாம். அங்கே 40,50 இலட்சம் அளவிலும் தங்கும் விடுதி கட்ட முடியும். $2\frac{1}{2}$ கோடி அளவிலும் தங்கும் விடுதி கட்டுகிற திட்டமிருக்கிறது. இதில் எது அந்த நகரத்திற்கு தேவை என்று முடிவு செய்து அதற்கேற்ப அங்கே தங்கும் விடுதி கட்டப்படும்.

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஹோட்டல்களை கட்ட முன்வருகிற இந்த அரசு ஏற்கெனவே 3,4 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப் பட்டு முழுமை பெறாமல் இருக்கின்ற திருத்தணி மற்றும் திருக் கழுக்குன்றத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற அந்த ஹோட்டல் கள் முழுமை பெறுவதற்கு உடனடியாக நிதியை ஒதுக்கி அதை நிறைவேற்றித்தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-25 மணி

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, திருத்தணியிலும், திருக்கழுக்குன்றத்திலும் கட்ட இருப்பது 'வே-சைடு ஃபெசிலிட்டீஸ்' என்ற அளவிலே இரண்டு அறைகள் மட்டும் கொண்ட ரெஸ்டாரன்ட். அந்த விடுதிகளின் வேலை தொடங்கப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூரில் புகழ்பெற்ற ஜலகண்டேஸ்வரர் கோட்டைக்கு கீழே..... (மணியடிக்கப்பெற்றது).

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக மாவட்டத் தலைநகரங்களில், இல்லாத இடங்களில் இதுபோன்ற ஹோட்டல்களைக் கட்டி பயணிகள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய முன்வருமா? அதேநேரத்தில் தந்தைப் பெரியார் மாவட்டமாக இருக்கின்ற ஈரோடு தலை நகரத்தில் ஹோட்டல்கள் கட்டி பயணிகள் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன் பகுதிக்கு மட்டும் அமைச்சர் விடை சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களிலே சுற்றுலாத் துறை மூலமாக தங்கும் விடுதி கட்ட வேண்டும் என்ற அந்தக் கொள்கை இருக்கின்றது, ஆனால் எங்கெங்கே கோரிக்கை இருக்கின்றதோ, எங்கெங்கே தேவை இருக்கின்றதோ அங்கே கட்டுகின்றோம். ஈரோட்டிலே அது தேவை என்று செங்கோட்டையன் அவர்கள் கூறினால், அதற்கான இடத்தையும் அங்கே தேர்வு செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யமுடியு மானால் அங்கே தங்கும் விடுதி கட்டுவதற்கு சுற்றுலாத் துறை முன்வரும்.

1990 மே 10]

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டுவதற்கான பரிசீலனை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் இந்த ஆண்டு அப்படி எத்தனை இடங்களில் தங்கும் விடுதிகள கட்டப் போகிறார்கள்? அதற்கான திட்டம் உள்ளதா? அது போல கடந்த ஆண்டு நீங்களே, உங்கள் தலைமையிலே பார்வை யிட்டீர்கள் (மணியடிக்கப்பெற்றது).....

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டத் தலை நகரங்களில்—புதுகோட்டையிலும், தூத்துக்குடியிலும், நெல்லை யிலும், சேலத்திலும் கட்டுவதற்கான திட்டம் இருக்கிறது. பழனியில் 'வே—சைடு ஃபெசிலிட்டீஸ்' என்று சொல்கிற அளவிலே ஒரு ரெஸ்டாரன்ட் கட்ட இருக்கிறோம். அதற்கான இடத்தையும் தேர்வு செய்து விட்டோம். தங்கும் விடுதி கட்டு வதற்கு ஒரு இடம் தரப்பட்டு இருக்கின்றது. அது தாழ்வான இடம். அதை மண் போட்டு நிரப்ப வேண்டும். அடுத்த கட்டமாக ஓராண்டு கழித்து அங்கு தங்கும் விடுதி கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஆனால் ஏற்கெனவே கோவில் மூலமாக பல்வேறு விடுதிகள் இருக்கின்றன. அவைகளையும் நன்றாகப் பராமரித்து பயணிகள் தங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய, பழனி ஆண்டவர் கோவில் மூலமாக அந்த வசதிகளைச் செய்து தருவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பக்தி மார்க்க நிகழ்ச்சிகளில் அதிகாரிகள் பங்கெடுத்தல்.

*8501 திரு. கே. ரமணி:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இந்து மதக் கோவில்களில் பக்தர்கள் அல்லது பெரிய மனிதர்கள் தனிப்பட்ட முறையில் நடத்துகிற பலதரப்பட்ட பக்தி மார்க்க நிகழ்ச்சிகளில் அரசு அதிகாரிகள் பங்கெடுத்துக் கொள்ள அரசு அனுமதியளித்துள்ளதா?

(ஆ) இல்லையெனில், அதிகாரிகள் தாங்களாக அப்படி பங்கேற்பதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதியில் இந்துசமய திருக்கோயில் நிகழ்ச்சிகளில் அரசு அதிகாரிகள் கலந்து கொள்வதை தடைசெய்யும் விதி எதுவும் இல்லை.